




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி:16.09.2022

## தலைமைக் கழக அறிவிப்பு

**தந்தை பெரியார் அவர்களின் 144வது பிறந்தநாள் விழா: தஞ்சையில் கழக பொதுச்செயலாளர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.**

பகுத்தறிவு பகலவன், சுயமரியாதை சுடரொளி, திராவிட இயக்கத்தின் பெருந்தலைவர் **தந்தை பெரியார் அவர்களின் 144வது பிறந்தநாள்** 17.09.2022 சனிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி அன்றைய தினம் **காலை 10 மணிக்கு** தஞ்சை மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் **அருகில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.**

சென்னை அண்ணாசாலை, அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் உள்ள **தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு கழக துணைப்பொதுச்செயலாளர் திரு.G.செந்தமிழன்** அவர்களின் தலைமையில் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூராட்சி, ஊராட்சி, வார்டு / வட்ட கழகம் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என **அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**